## மேல் மாகாண மாகாண சபை - சபைக்கூட்டம்

**2019 ஜனவரி மாதம் 22 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

# நிக ழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□□/vi (1)19/01)**

அ. மேல் மாகாணத்தின் அரச சேவைகள் ஆணைக்குழு சபையின் செயலாளரினால் மேல் மாகாணத்தின் பட்டதாரி ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பதற்கு பகிரங்க பத்திரிகை அறிவிப்பொன்று வெளியிடப்பட்டிருந்ததா ? அது எப்போது ?

ஆ. அவ் அறிவித்தலுக்கு இணங்க ஆட்சேர்ப்பிற்கு உரிய கலை பட்டதாரிகளின் ஆகக் குறைந்த தகைமை என்ன ?

இ. i. இலக்கம் 329/1 “சிசிற” பகல இம்புல்கொட இம்புல்கொட, என்ற முகவரியில் வசிக்கும் எம்.கே.எல். ஜயசூரிய என்பவர் ஆசிரிய நியமனத்திற்காக விண்ணபித்துள்ளாரா ?

ii. அவர் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் எவ்வளவு ?

ஈ. i. 2019.01.02 ஆந் திகதியில் எவ்வளவு எண்ணிக்கையினருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது ?

ii. அவ் வேளையில் எம்.கே.எல். ஜயசூரிய அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளுக்கு நியமனம் வழங்காமைக்குரிய காரணத்தை தெளிவுபடுத்துவீர்களா ?

உ. அங்கு 88 என்ற புள்ளிகள் வரையறையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதா ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□□/vi (1)19/02)**

அ. மேல் மாகாணத்தின் விளையாட்டு வித்தியாலயம் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதனை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அதற்காக 2018 ஆம் ஆண்டில் மாகாண சபையின் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு எவ்வளவு ? என்றும் அந் நிதியினை செலவு செய்து 2018 ஆம் ஆண்டில் எத்தனை செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன எனவும், இச் சபைக்கு அறியத் தருவீர்களா ?

இ. இவ் ஏற்பாட்டிற்கு மேலதிகமாக அத் தாபனத்திற்கு செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ? என்றும் அது எம் முறையில் எனவும் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□□/vi (1)19/03)**

அ. மேல் மாகாணத்தின் விளையாட்டு அமைச்சுக்கு இணைக்கப்பட்டு எத்தனை விளையாட்டுப் பயிற்சியாளர்கள் காணப்படுகின்றன ?

ஆ. இவ் வேளையில் விளையாட்டுப் பயிற்சிளார்களின் வெற்றிடம் ஒன்று காணப்படுகின்றனவா ? எனவும் வெற்றிடம் காணப்பட்டால் அதனை யார் செய்கின்றனர் என்பதனையும், இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அவ்வாறு இலகுவாக பதில் கடமையாற்றக் கூடிய விளையாட்டுப் பயிற்சியாளர்கள் காணப்பட்ட போதும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் சேவையினை தேவையற்ற முறையில் பெற்றுக் கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அவ்வாறே அவ் உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சம்பளம் மக்களின் நிதியினை முறையற்ற ரீதியில் பயன்படுத்துவது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ? என்பதனையும் அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன ? என்பதனையும் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)19/04)**

அ. மேல் மாகாணத்தின் விளையாட்டு அமைச்சில் நிரந்தர விளையாட்டு பயிற்சியாளர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர் ? என்பதனையும் அவர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ? என்பதனையும் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் என்ன என்பதனையும் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. விளையாட்டு அலுவலர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் முறைக்கு மாறாக வெளிவாரி விண்ணப்பதாரிகளின் மூலம் விளையாட்டு அமைச்சின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பதவிகளை பூரணப்படுத்த முயற்சி ஒன்று எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அவ்வாறு முயற்சி எடுத்தவர்கள் யார் ? என்பதனையும் இவ் வேளையில் ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக 5 வருடங்களைக் கொண்ட குறுங்கால விளையாட்டு உத்தியோகத்தர்களை பயிற்சியாளர்களாக நியமிப்பதற்கு ஏற்ற முறையில் தேவையான தகைமைகளை ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்குவது சட்டத்திற்கு முரணானது என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஈ. விளையாட்டுப் பயிற்சியாளர்களாக நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்காது பயிற்சியாளர்களின் சம்பள முரண்பாட்டினை அகற்றுவதற்கு இவ் வேளையில் நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கை யாது ? என்பதனை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)19/05)**

அ. மேல் மாகாணத்தின் திவுலபிடி பிரதேச செயலாளர் பிரிவின் ம/ப கெஹெல் எல்ல பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளரின் பெயர் மற்றும் முகவரியை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

ஆ. இந்த கூட்டுறவுச் சங்கத்தில் வர்ணகுல ஆதித்ய செம்புகுட்டிகே நதுன் லஹிறு பிரிமால் ஜென்ஸ் இலக்கம் 144/1 கொச்சிகடை வீதி ஹல்பே, கட்டான என்ற முகவரியைச் சேர்ந்தவர் 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கடன் நிதி பெற்றுக் கொண்டுள்ளாரா ?

இ. மேற் கூறிய நபர் கடனினை செலுத்தாதன் காரணமாக பிணையாக வைத்திருந்த சொத்தினை ஏலத்தில் விட்டு கடன் நிதி அறவிடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அந்த ரூ. 2,165,600/- நிதியிற்கு மதிப்பிடப்பட்டிருந்த சொத்து பிற வெளி நபர்கள் எவரும் கலந்து கொள்ளாத ஏலத்தில் ரூபா ஒன்பது இலட்சத்தினை விலையாக முன்வைத்து ரூபா பதின்மூன்று இலட்சத்திற்கு (1,300,000/-) அந்த கூட்டுறவுச் சங்கத்தின் ஏலத்தில் கலந்து கொண்ட கூட்டுறவுப் பணிப்பாளர் ஒருவரான திரு. எம்.எம். ஸ்டிவன் பாரிஸ் கருணாரத்ன என்பவரே கொள்வனவு செய்துள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. இந்த கொடுக்கள் வாங்கலுக்குரிய கணக்கு மற்றும் கடித ஆவணங்கள் எல்லாவற்றையும் இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

ஊ. இம் முறையில் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் மக்களை கொள்ளையடிப்பது தொடர்பாக நீங்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை ஒன்றை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**06.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)19/06)**

அ. பன்முகப்படுத்தப்பட்ட மானியத்திற்கு மேலதிகமாக அபிவிருத்தி நடவடிக்கைக்காக அமைச்சின் ஏற்பாடு மற்றும் ஏனைய ஏற்பாடுகளை ஒதுக்கும் போது உறுப்பினர்களினூடாக பிரேரணை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா ?

ஆ. அதற்காக கடைபிடிக்கும் ஒழுங்கு முறை ஒன்று காணப்படுகின்றதா ?

இ. அடுத்த ஏப்ரலின் பின்னர் மாகாண சபை உறுப்பினர் பதவி மற்றும் அமைச்சர்களின் மற்றும் பதவிக்குரியவர்களின் பதவிக் காலம் நிறைவு பெறுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அதற்கிணங்க ஏற்பாட்டினைப் பயன்படுத்தும் போது அபிவிருத்திக்காக கவனத்துடன் நிதியைப் பயன்படுத்துவதை விட எதிர்வரும் தேர்தலினை இலக்காகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு கூடியளவான நிலைமை ஒன்று காணப்படுகின்றது என்பதனை நம்புகின்றீர்களா ?

உ. 2019 ஜனவரி 08 ஆந் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட கடித ஆவணங்கள் அதற்கு சாட்சி என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. நிதி நடவடிக்கைக்கு பொறுப்பான அமைச்சராக இது தொடர்பாக உங்களது கருத்து மற்றும் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**07.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)19/07)**

அ. 2019 ஜனவரி 08 ஆந் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் கௌரவ தவிசாளர், கௌரவ விவசாய அமைச்சர், கௌரவ சுகாதார அமைச்சரினால் கௌரவ ஆளுநரை விழித்து அவரிடமிருந்து ஏற்பாட்டினை ஒதுக்கிக் கொள்வதற்கு மேற்கொண்ட வேண்டுகோள்கள் காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிகின்றீர்களா ?

ஆ. அதில் குறிப்பிடப்படுவதைப் போன்று வீதி அபிவிருத்திக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய ஏற்பாட்டினை ஒதுக்கித் தருமாறான வேண்டுகோள் ஒன்று குறிப்பிடப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. அக் கடிதங்களில் குறிப்பிடப்படுவதைப் போன்று முன்னைநாள் கௌரவ ஆளுநரும் நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு வாய்மூலம் இணங்கியுள்ளார் என்பது தெரியவருகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. மாகாண வீதி அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சர் ஒருவர் இருக்கும்போது அவ் ஆளுநரினால் எதன் அடிப்படையில் அந்த ஏற்பாடுகள் வழங்க முடியும் ?

உ. எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடுவதால் கௌரவ ஆளுநரிடம் இந்த அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஏற்பாட்டிற்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது என கடிதங்களில் குறிப்பிடப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. பார்க்கும் போது சிக்கல் ஒன்றாக காணப்படும் இதன் விளக்கம் என்ன ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. சபைக் கூட்டம்

**பிரேரணை :**

"நடவடிக்கை ஒழுங்கு விதி இலக்கம் 14(2) (அ) இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தபோதும் 2019.02.18 ஆந் திகதி திங்கட் கிழமை சபைக் கூட்டம் நடைபெறும் தினம் ஒன்றாக இந்த மாகாண சபை தீர்மானிக்கின்றது"

## XI. சபை நடவடிக்கை

**கௌரவ சபாநாயகரினால் முன்வைக்கப்படுவதற்கு**

**பிரேரணை**

"2018.10.23 2018.12.19 மற்றும் 2019.01.09 ஆகிய தினங்களில் நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் படி நடவடிக்கை ஒழுங்கு விதி இலக்கம் 39(4) மற்றும் 53(3) இன் ஏற்பாடுகள் தொடர்பாக சந்தேகம் ஏதுமின்றி இன்றைய தினம் 2019.01.22 இற்கு உரிய நிகழ்ச்சி நிரலில் இலக்கம் XII தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை விடயத்தின் கீழ் காணப்படும் விடயங்களின் ஒழுங்கு முறை முறையே விடய இலக்கம் 2 மற்றும் 1 என்ற ரீதியில் இடம்பெற வேண்டும் எனக் கருதி செயற்படவேண்டும்."

## XII. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

(நிகழ்ச்சி நிரலி இலக்கம் XI சபை நடவடிக்கை பிரேரணைக்கு இணங்க தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை விடயத்தின் மாற்றமடைய இடமுண்டு)

**01. கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்**

மேல் மாகாணத்தின் கிராமிய பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இன்று போக்குவரத்துக் கஷ்டம் பாரிய அளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது நாங்கள் யாவரும் அறிந்த விடயமாகும். அதன் காரணமாக பாடசாலை வேன் கலாசாரம் தோன்றியுள்ளது பொருளாதார கஷ்டத்தினை கருத்திற்கொண்டு பாடசாலை பிள்ளைகளின் போக்குவரத்து கஷ்டத்தினை இல்லாதொழிப்பதற்காகவும் தேகாரோக்கியம் உள்ள பிள்ளைகளை உருவாக்குவதற்காகவும், 8 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றினைப் பெற்றுக்கொடுப்பது சிறந்தது எனவும் அதற்காக கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ஏதாவது சதவீதம் ஒன்றின் கீழ் ஏற்பாட்டினை ஒதுக்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்றினை பெற்றுக்கொடுப்பது சிறந்தது என இம் மேல் மாகாண மாகாண சபை எண்ணுகின்றது. **(பி/vi(1)18/07)**

**02. கௌரவ அஜந்த நிரோஷன் பாதுக்க அவர்கள்**

நுண் நிதிக் கடனை வழங்குவது தனியார் பிரிவுத் தாபனங்களினால் மிகவும் சூட்சமமான முறையில் மேல் மாகாணத்திலும், நாடு முழுவதிலும் இடம்பெறுகின்றது. குழுக்களுக்கான கடன் மற்றும் தனிப்பட்ட கடன் 40% வருடாந்த வட்டியின் கீழ் அறவிடப்படுகின்றது, அது பாரிய அளவு அநீதியாக சுரண்டும் நடவடிக்கையாகும். இக் கடன் முறை தொடர்பாக மத்திய வங்கியின் மேற்பார்வை தற்போது போதுமானதில்லை ஆகையால் இந் நிலைமை தொடர்பாக அதிகளவு கவனம் ஒன்றைச் செலுத்தி இவ்வாறான கடன் முறையை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய சட்டத்திட்டங்களை விரைவாக தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு இம் மேல் மாகாண மாகாண சபை நிதி அமைச்சிடமும் மத்திய வங்கியிடமும் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/vi(1)18/08)**

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2019.01.10** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம்
மேல் மாகாண மாகாண சபை,
11ஆம் மாடி,
மேல் மாகாண சபை காரியாலயத்தின் புதிய கட்டடம்,
204,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
சிறீ ஜயவர்தனபுர,
பத்தரமுல்லை.